









We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*













# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 27.10.2018


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்












## இந்திய நிகழ்வுகள்

- **பயங்கரவாத எதிர்ப்பு,** ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் போதை **பொருட்கள் கட்டுப்பாடு,** ஆட் கடத்தல் மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றில் உதவுவதை வலுப்படுத்துவதையும் ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்ட உள்நாட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் **இந்தியா – சீனா** ஆகிய நாடுகள் முதன் முறையாக கையெழுத்திட்டுள்ளன.

- ஈரானின் தலைநகரான **டெஹ்ரானில், இந்தியா, ஆப்கானிஸ்தான்** மற்றும் ஈரான் ஆகிய மூன்று நாடுகளுக்கிடையேயான **"சபஹார் ஒப்பந்த"** ஒருங்கிணைப்பு ஆணையத்தின் முதலாவது சந்திப்பு நடைபெற்றது.
    - 2016ம் ஆண்டு மே மாதத்தில் இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் சபஹார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
    - சபஹார் துறைமுகத்தை பயன்படுத்தி இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் நாடுகளுக்கிடையே சரக்கு போக்குவரத்து மற்றும் பெருவழிப் போக்குவரத்திற்கான பாதைகளை அமைப்பதற்காக இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது.

- நாடு முழுவதும் 2020ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதிக்குப் பிறகு **BS-4** வகை வாகனங்களை விற்பனை செய்யவும், வாகனங்களை பதிவு செய்யவும் உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளது.
    - காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக **பாரத் ஸ்டேஜ் - 4 (BS – 4)** வகை வாகனங்களை விற்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **அயர்ன் மேஜிக் - 19 (Iron magic – 19)** பயிற்சி – **ஐக்கிய அரபு அமீரகம் (UAE – United Arab Emirates)** மற்றும் **அமெரிக்கா** ஆகியவை இணைந்து நடத்தும் கூட்டு இராணுவப் பயிற்சியான அயர்ன் மேஜிக் - 19 ஆனது துபாய்க்கு அருகே நடைபெற்று வருகிறது.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- ஆண்டு முழுவதும் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆயுதப் படையானது பிறநாடுகளுடன் மேற்கொள்ளும் கூட்டு இராணுவப் பயிற்சியின் ஒரு பகுதியே இந்த 2 வார காலப் பயிற்சியாகும்.

- துருஷ்பா III (Durzhba – III) இராணுவப் பயிற்சி:-
    - ரஷ்யாவின் சிறப்பு படைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான துருஷ்பா – 2018 (நட்புறவு – 2018) என்ற இருதரப்பு கூட்டு இராணுவப் பயிற்சியானது பாகிஸ்தானில் தொடங்கியுள்ளது.
    - இரண்டு வார கால இந்த கூட்டு இராணுவப் பயிற்சியானது இரு நாடுகளுக்குமிடையேயான இராணுவங்களை வலிமைப்படுத்துவதையும் ஒத்துழைப்பைக் கட்டமைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குறிப்பு:
    - துருஷ்பா – பயிற்சியானது ரஷ்யா மற்றும் பாகிஸ்தானிடையே 2016 முதல் நடைபெற்று வருகிறது.
    - துருஷ்பா என்ற ரஷ்ய வார்த்தைக்கு நட்பு என்று பொருள்.

- SME-க்களுக்கான (சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்) (Small and Medium Enterprises) ஐரோப்பிய மாநாட்டின் 8வது பதிப்பு (8th Edition of European Congress on SMEs) போலாந்து நாட்டின் கோடாவைஸ் நகரத்தில் நடைபெற்றது.
    - இம்மாநாட்டின் கருத்துரு (Theme) "Business – Self – Government Together For Economy"

## நியமனங்கள்

- எத்தியோப்பியாவின் முதல் பெண் அதிபராக முன்னாள் தூதரக அதிகாரியான "சாலேவொர்க் ஸீவ்டே" Sahle-Work Zewde என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இதுவரை அதிபராக இருந்த முலாட்டு டெஸ்ஹோம் பதவி விலகியதையடுத்து, சாலேவொர்க்கை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மனதாக தேர்ந்தெடுத்துள்ளனர்.

- உத்தரகாண்ட் உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான விஜய் குமார் பிஸ்த்,Vijai Kumar Bisht சிக்கிம் உயர்நீதிமன்றத்தின் புதிய

தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பொருளாதார நிகழ்வுகள்

- பாரத ஸ்டேட் வங்கியானது **(SBI – State Bank of India)** தனது மங்களூரின் லாக்பாக் கிளையில் **'SBI செல்வ வள மையம்' (wealth Hub)** என்ற மையத்தை திறந்ததின் மூலம் தனது வளமான வணிக சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இந்த செல்வ வளமையானது **(wealth Hub) SBI** தலைவர் **ரஜ்னீஷ் குமாரால்** தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
    - இதன்மூலம், வாடிக்கையாளர்களுக்கு விரிவான வளமான வணிக சேவைகளை அறிமுகப்படுத்தும் நாட்டின் முதல் பொதுத்துறை வங்கியாக SBI மாறியுள்ளது.

We Shine Academy™